குழந்தைகளுக்கு வேதாகமம்
வழங்குபவர்



# கிதியோனின் சிறிய படை

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest; Alastair Paterson

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி
உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.


யோசுவா இறந்த
பின், இஸ்ரவேல்
ஜனங்கள்
தேவனுக்கு
கீழ்ப்படியாமல்,
தேவனை தங்களுடைய
வாழ்க்கையில் இருந்து
விட்டுவிட்டார்கள்.


தேவனோ அவர்களுடைய பிறத்தியாரான மீதியானியரை அவர்களுடைய வயல்களையும், வீடுகளையும் எரிக்கும்படி விட்டுவிட்டார்.
இஸ்ரவேலர்கள் குகைகளில் வாழ வேண்டியதாயிற்று.


ஒரு இஸ்ரவேலன், கிதியோன்,
தன்னுடைய கோதுமையை
பயிரிட இரகசியமான
இடத்தை வைத்திருந்தான்.
மறைவாக அவனுடைய
தானியங்களை
ஒரு மரத்தின் கீழ்
போரடித்துக்
கொண்டிருந்தான்.

மீதியானியருக்கு அந்த இடம் தெரியவில்லை, ஆனால் தேவனுக்குத் தெரியும். தேவன் ஒரு செய்தியை தேவதூதன் மூலமாக கிதியோனுக்கு அனுப்பினார்.



கிதியோன் தன்னுடைய தந்தையின் தவறான கடவுளின் விக்கிரங்களை உடைத்துப்போட்டு, உண்மையான தேவனுக்கு ஒரு பலிபீடம் கட்ட தேவன் விரும்பினார். ஒரு வேளை தன்னுடைய நாட்டு மனிதர்கள் தன்னை கொன்று போடுவார்கள் என்று பயந்தாலும், அவன் தேவன் கட்டளையிட்டதை செய்தான்.



கிதியோன் இஸ்ரவேலின் படையை துஷ்டரான மீதியானியருக்கு எதிராக நடத்தி செல்ல தேவன் விருப்பப்பட்டார். ஆனாலும் கிதியோன் பயப்பட்டான். தேவன் தன்னோடு இருக்கிறார் என்பதை அறிய ஒரு அடையாளத்தைக் கேட்டான். பின்பு அவன் ஒரு மயிருள்ள ஆட்டுத்தோலை தரையிலே போட்டான்.





"தோலின் மேல் மாத்திரம் பனி பெய்து, தரை காய்ந்திருந்தால்,

நீர் சொன்னதுபோல என் கையினால் இஸ்ரவேலை காப்பாற்றுவீர் என்று நான் அறிவேன்," என்று கிதியோன் வேண்டுதல் பண்ணினான். காலையிலே தரையெல்லாம் காய்ந்திருந்தது, ஆனால் தோலோ நன்றாக நனைந்திருந்தது.

கிதியோன் இன்னும் சந்தேகப்பட்டான். இப்போது தரையெல்லாம் நனைந்திருக்க வேண்டும். தோல் மாத்திரம் நனையக் கூடாது என்று தேவனிடம் பனியை அனுப்ப சொன்னான். அடுத்த நாள் காலையில் தரை நன்றாய் காய்ந்திருந்தது, ஆனால் தோல் உலர்ந்ததாயிருந்தது.



கிதியோன் 32000 பேர் படையுடன் புறப்பட்டான். தேவனோ அதை 300 பேராக குறைத்துப் போட்டார். "என்னுடைய கையினால் இரட்சிப்பு வந்தது", என்று சொல்லக் கூடாது என்று தேவன் விரும்பினார். இஸ்ரவேலை இரட்சிக்கிறது தேவன் ஒருவரே.



கிதியோன் இன்னும் பயப்படுகிறான்
என தேவன் அறிந்து, ஒரு மீதியானியரின்
சேவகன் மற்றவனிடம் தான் கண்ட விசித்திரமான
சொப்பனத்தை கூறுவதை, கிதியோன் இரகசியமாக
கேட்க வழி விட்டார். அந்த சொப்பனத்தில், ஒரு
றொட்டி துண்டு மீதியானியரின் கூடாரத்தின்
மேல் விழுந்து அதனை
அழித்துப்போட்டது.





மற்றும் போர்சேவகனோ மிகவும் பயப்பட்டான். "இது ... கிதியோனின் பட்டயம் ..." என்று அழுதான். கிதியோன் சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் கேட்டபோது, தேவன் ஜெயம் கொடுக்கப்போகிறார் என்று கிதியோன் அறிந்து கொண்டான்.

கிதியோன் ஒரு இரவு தாக்குதல்
நடத்த திட்டமிட்டான். அவன் ஒவ்வொரு
போர்சேவகனுக்கும் ஒரு எக்காளத்தையும்,
வெறும் பானைக்குள்
தீவட்டியையும்
வைத்து கொடுத்தான்.
அவர்கள் மீதியானியரின்
படையை சூழ்ந்து
கொண்டார்கள்.



கிதியோன் செய்கை கொடுத்தபோது, போர்சேவகர்கள் எக்காளத்தை ஊதினார்கள், பானைகளை உடைத்து, தீவட்டியை கொளுத்தினார்கள். என்ன சப்தம்! என்ன குழப்பம்! பயந்த மீதியானியர்கள் எழுந்து ஓடிப்போனார்கள்.



அந்தப் பெரிய வெற்றிக்குப் பின்னர், இஸ்ரவேல் மனிதர்கள் கிதியோனை நியாயாதிபதியாக இருக்க சொன்னார்கள்.



"நான் உங்களை ஆளமாட்டேன்... கர்த்தரே உங்களை ஆளுவார்" என்று கிதியோன் பதிலளித்தான். தேவன் மாத்திரம் தான் ஆளுகை செய்ய அதிகாரம் படைத்தவர் என்று அவன் அறிந்திருந்தான்.



# கிதியோனின் சிறிய படை

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

நியாயாதிபதிகள் 6 - 8

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

# முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16